[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 28 முற்பகல் 11–15

4. இறகுப் பந்தாட்டப் போட்டியில் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக்கூடிய திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஓர் இறகுப் பந்து அகாடமி தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பல்வேறு விளையாட்டு அறிவியல் ஆய்வுகளைப் பயன்படுத்தி வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு சர்வதேச போட்டிச் சூழல்களுக்கேற்றவாறு அவர்களைத் தயார் செய்ய இந்த அகாடமி உதவும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சுற்றுலா, பண்பாடு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழால் வளர்ந்தது பல கட்சிகள், இயக்கங்கள். ஆனால், தமிழை வளர்த்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே என்ற வரலாற்றுப் பதிவிற்கிணங்க, (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் தமிழன்னைக்காக உருவாக்கிய கட்டமைப்புகளான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம், உலகத் தமிழ் மாநாடுகள் இவற்றின் வரிசையில் 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற (மேசையைத் தட்டும் ஒலி) பாவேந்தரின் வரிகளுக்கேற்ப, அருந்தமிழ் வளர்த்திடும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஏற்கெனவே Harvard University–ல் தமிழ் இருக்கை, தமிழ் வளர் மையம், தமிழ் பண்பாட்டு மையம், இளந்தமிழர் இலக்கியப் பட்டறை, உலகத் தமிழறிஞர்களுக்கு 65 தகைசால் விருதுகள், குறிப்பாக சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்,

2018 ஜூன் 28] [திரு. க. பாண்டியராஜன்]

மறைமலையடிகளார், அயோத்தி தாசர் பண்டிதர் ஆகியோர் பெயரில் புதிய விருதுகளை அறிவித்து, தொல்காப்பியருக்குச் சிலையும் அறிவித்து, இன்று அந்த உன்னத வரிசையில் 5 முத்தான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரில் உன்னதமான கலை மற்றும் சமூகவியல் மேம்பாடு ஆய்வு இருக்கை ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும், உலகத்தில் இருக்கிற அனைத்து உன்னதப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் முழக்கம் கேட்கச் செய்ய, Oxford, Johannesburg, யாழ்ப்பாணம் மற்றும் மலேயா ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் உருவாக்கப்படும் என்றும், உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் கலை மற்றும் பண்பாட்டை பேணிக் காக்கும் நோக்கில், அங்குள்ள தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைத்து உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு நடத்தப்படும் என்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், உங்களை நன்றி சொல்வதற்குத்தான் அழைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதையே நீங்கள் திரும்பவும் சொன்னால், என்ன அர்த்தம்? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: அனைத்து அறிவிப்புகளுக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பாதையில், சீரிய வழியில் தொடர்ந்து செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அடிபிறழாது ஆட்சி செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தற்போது விதி 110–ன்கீழ், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் யாத்ரி நிவாஸ் கட்டுவதற்கு 30 கோடியே 29 இலட்சம் ரூபாய்

[திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்] [2018 ஜூன் 28

ஒதுக்கீடு செய்தமைக்கும், இந்த நிதியாண்டில் இந்து சமய அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிதி வசதியில்லாத, கடந்த காலங்களில் 500 திருக்கோயில்கள் என்றிருந்ததை அதிகரித்து, 1,000 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளித்து, அதற்காக ரூ.10 கோடி நிதியொதுக்கீடு செய்தமைக்கும் மற்றும் கடந்த காலங்களில் 500 கோயில்கள் என்று வரையறை செய்திருந்ததை, தற்போது 1,000 கோயில்களாக உயர்வு செய்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதித்து நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறை என்றாலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்று நினைக்கும் அளவிற்கு, விளையாட்டுத் துறைக்கு வரலாற்றில் இல்லாத அளவிற்கு நிதியொதுக்கீடு செய்து, உலகத் தரம் வாய்ந்த உள் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, (Elite Scheme) எலைட் திட்டம், வெற்றியாளர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, சர்வதேசப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையை இரு மடங்காக உயர்த்தி அளித்து, தமிழக விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று, மாநிலத்திற்குப் பெருமை சேர்க்க வழி செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து செயல்படும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு விதி 110–ன்கீழ் 37 கோடியே 34 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, முத்தான நான்கு

2018 ஜூன் 28] [திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி]

சிறப்புத் திட்டங்களை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எனது துறையின் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஆலயமாக விளங்கும் "அசுரரை அழித்த இடம்; அது தேவரைக் காத்த இடம்" பாடலில் புகழ்ப்பெற்ற திருத்தலமான அறுபடை வீடுகளிலே மூன்றாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியத் திருநாட்டிலே உள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும் வரக்கூடிய பக்தர்களின் வசதிக்காக, தங்கும் விடுதி அமைக்கப்பட வேண்டுமென்று நீண்ட காலமாக மக்களால் வைக்கப்பட்ட கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே இன்றைக்குச் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கத்திலே புகழ்பெற்ற அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தில் அம்மா அவர்கள் பல கோடி ரூபாய் மதிப்புள்ள யாத்ரி நிவாஸ் அமைத்துத் தந்தார்கள். அம்மாவின் வழியிலே அரசை நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், ஸ்ரீரங்கத்திலே அமைக்கப்பட்ட யாத்ரி நிவாஸுக்கு இணையாக, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரிலே ரூபாய் 30 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலான தங்கும் விடுதியை அமைத்திட அறிவிப்பு வெளியிட்டமைக்கு தூத்துக்குடி மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய சிறிய மாவட்டங்களுக்கெல்லாம்கூட, மாவட்ட விளையாட்டரங்கம் அமைத்திருக்கக்கூடிய வேளையிலே,

[திரு. கே.சி. வீரமணி] [2018 ஜூன் 28

வேலூர் மாவட்டம் 13 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய மாவட்டமாக இருந்தும், அங்கு அமைக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சராக நீண்ட காலமாக இருந்த காலத்திலும்கூட நிறைவேற்ற முடியாத இந்தத் திட்டத்திற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்ட விளையாட்டு வீரர்களுடைய நீண்ட நாளைய கனவினை நிறைவேற்றிடும் வகையில், இன்றைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் அறிவிப்பினைச் செய்திருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் ஒன்றும் சொல்லவில்லை. எங்கள் காலத்தில் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். நன்றிதானே, சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ் பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். பொதுவாக விதி 110 என்று சொன்னால், அத்தியாவசியமான ஒருபொருள் பற்றித்தான் சொல்வார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் மிகவும் கெட்டிக்காரர். ஒரு மினி பட்ஜெட்டையே விதி 110–ன்கீழ் படித்திருக்கிறார். எல்லா இலாகாக்களுக்கும் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை; வரவேற்கிறேன். ஆனால், நம்முடைய வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். “துரைமுருகன் அவர்கள் மந்திரியாக இருந்தார். அவராலே முடியாததை இவர் செய்தார்.” என்று சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. துரைமுருகன்: அவர் கொண்டு வராததை இவர் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னார், மகிழ்ச்சி. உங்களுடைய சர்வ

2018 ஜூன் 28] [திரு. துரைமுருகன்]

வல்லமை படைத்த அம்மா அவர்கள் இருந்த காலத்திலே கொண்டு வர முடியாததை, எடப்பாடியார் கொண்டு வந்தார் என்றும் சொல்லலாம். (சிரிப்பு) அடுத்து, நீங்கள் பல தலைவர்களின் பெயர்களில் ஆய்வு இருக்கைகளை ஏற்படுத்துகிறீர்கள். ஆனால், பல்கலைக்கழகங்களிலே ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட இருக்கைகளின் நிலை என்ன என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேலைப் பளுவின் காரணமாகத் தெரியாது. ஆனால், அது எனக்குத் தெரியும். காரணம், அண்ணாவின் பெயராலே ஓர் இருக்கை பல்கலைக்கழகத்தில் இருந்தது. இன்றைக்கு அது எந்த நிலையில் இருக்கிறது என்றே தெரியவில்லை. அவர் பெயரில் இருக்கை இன்னும் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. அதேபோன்று, ஆய்வு இருக்கைக்கென்று திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்த பணம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஆகையினால், ஆங்காங்கு உள்ள பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற இருக்கைகள் குறித்த நிலையை அமைச்சர்கள் அறிந்து, உரிய பங்களிப்பினை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, வெளிநாடுகளிலிருந்து தமிழ் படிப்பதற்கு இந்தக் காலத்திலே மிகவும் ஆசையாக இருக்கிறார்கள். பழைய காலம் முடிந்துவிட்டது. தற்போது Madagascar, Fiji தீவு, Sey chelles போன்ற இடங்களிலெல்லாம் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக நிறைய புத்தகங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான ஆசிரியர்களை அனுப்ப வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, தமிழ் ஆசிரியர்களை அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களின் அழைப்பின்பேரில் ஒரு பொதுக் கூட்டத்திற்குச் சென்றேன். அவர் என்னை திருச்செந்தூருக்கு அழைத்துக்கொண்டு போனார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்று விவாதம் எல்லாம் வேண்டாம்; நன்றி சொல்லுங்கள்.

[2018 ஜூன் 28

திரு. துரைமுருகன்: நான் நன்றிதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உரையை முடித்து விடுங்கள்.

திரு. துரைமுருகன்: அங்கு கோயிலுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். நான் எல்லா ஊர்களுக்கும் போனாலும் கலையின்மேல் உள்ள ஈடுபாட்டின் காரணமாக, கோயில்களைப் பார்ப்பதுண்டு. அந்தக் கோயிலைப் பார்த்தேன். தமிழ்நாட்டிலேயே ** இருந்ததை நான் பார்த்தேன். அது வேறு யார் கோயிலாக இருந்தாலும் பரவாயில்லை. அது என் கோயில். முருகன் கோயில் இல்லையா? (சிரிப்பு) ஆகையால், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குற்றச்சாட்டு சொல்வதுபோல் இருக்கிறது, வேண்டாம். அது வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. துரைமுருகன்: இறுதியாக நன்றி சொல்வதற்குத்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நன்றி சொல்வதற்குத்தான் நான் அனுமதி கொடுத்தேன். குற்றச்சாட்டு எல்லாம் நீங்கள் சொல்ல வேண்டாம்.

திரு. துரைமுருகன்: நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. நீங்கள் வேண்டுமானால் அதை எடுத்துவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விதி 110–ன்கீழ் நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் உங்களை அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் அமைச்சர்மீது குற்றச்சாட்டு சொல்லாதீர்கள். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: 'வாழ்க, வாழ்க' என்றா சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதற்கு நீங்கள் அமைச்சரிடம் நேரடியாக சொல்லிவிடலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 28]

முற்பகல் 11–25

திரு. துரைமுருகன்: எங்கள் ஊர்க்காரர்தான் அவர். நான் அவரிடம் சொல்லிவிடுகிறேன். அதில் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. நான், உங்களிடம் கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். I want to request you one thing, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. அதைப்பற்றிப் பேச வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அந்தக் கோயில் குறித்துப் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. துரைமுருகன்: வேலூர் மாவட்டத்திற்கு பல விளையாட்டுத் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எங்கே அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டால், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் இருக்கிறது; அதையொட்டி விளையாட்டரங்கத்தை அமைத்தால்தான், திருவள்ளுவர் பல்கலைக்கழகமும் வளரும், விளையாட்டுகளும் வளர்ச்சியடையும். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோடு போதும். நன்றி.

4. தகவல் கோரல்

(அ) மருத்துவப் படிப்புகளில் வெளி மாநிலத்தைச் சார்ந்தவர்கள் சேர்க்கை மற்றும் 'நீட்' தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரும் மசோதாக்களுக்கு விரைவில் அனுமதி பெற உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வின் காரணமாக, ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களுடைய எதிர்காலக் கனவு அவர்களெல்லாம் மருத்துவர்களாக வர வேண்டும் என்ற அந்தக் கனவு சிதைக்கப்பட்டு, இனி வரக்கூடிய காலங்களில் போதிய மருத்துவர்கள் கிராமங்களில் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிவிடும் என்ற ஓர் அச்சம் எல்லோருக்குமே ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், அந்த அளவிற்கு மாநிலத்தினுடைய கல்வி உரிமையை சிறிதும் மதிக்காமல், அதை மீறி, சர்வாதிகார ரீதியில் புறக்கணித்து,